# சுற்று பகை வென்று வெற்றிமேல் வெற்றிவாகை சூடும் நம் முதல்வரை வாழ்த்துவோம்! வணங்குவோம்!



"தம்மிற்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மண்ணுயிர்க் கெல்லாம் இனிதெ"ன்றான் அய்யன்
தம்மின்தம்மக்கள் அறிவுடைமை கருத்துக்கு எடுத்துக்காட்டாய்
தலைமை தாங்கும் தவப்புதல்வர் தமிழ்நாடு மாமுதல்வர்!
நம்தமிழ் மக்களின் நாநிலம் புகழ்வரம் பெற்ற மக்கள்
நாயகர்வெல் **முத்துவேல் கருணாநிதி இஸ்டாலின்**தான்
வம்மின் தமிழ்நாட்டோரே மதிஉலகத் தமிழரே
வரலாறு படைக்கும் நம்முதல்வரை **வாழ்த்துவோம்! வணங்குவோம்!**


கெடுமதியினரெல்லாம் இனித்தமிழ்நாடு "வெற்றிடமே" எனக்
கீழ்வான் உதயசூரியனாய் கிளர்ந்தெழுந்தார் மு.க.இஸ்டாலினே
நடுநிலை பிறழ்ந்தாரின் நயவஞ்சகநா ஊமையாகிடவும்
நம்தமிழ்மொழி தமிழினம் தமிழ்நாடு தலைநிமிர வைக்கும்
விடுதலை பெறவைக்கும் வேணவாச் செயல்வேகம் மிகுதிஅம்மா!
விதிசமை ஒன்றிய அரசின் விதிக்கும் விதிசெய்நம் முதல்வர்!
தடுத்துஒன்றியத்தகாத சார்புவஞ்சக செயல்களைத்தான்!
தலைநிமிர்ந்தே உன்னதத் தலைமை முதல்வராய் உலாவருவரே!

**அன்னம்பசிக்கும் இளஞ்சிறார் தன்வாயில் ஊட்டிபசிபோக்கி**
**தாய்மார்களுக்கு இலவயப் போக்குவரத்துக்கு உதவியோடே**
**நன்னயம் இருபால் மாணவர்க்கும் நயத்தகும் வழிவகுத்தே**
**நாட்டுஉழவர்தம் மனமகிழ நன்றுசெய்து தலைநிமிர்த்தியே**
**ஒன்றியஅரசே வெட்கப்பட உலகெலாம் சென்று தொழில்தழைக்கும்**
**ஓங்குசெயல்முறையால் தமிழகம் தொழில் வளர்ச்சி மேம்படுத்தும்**
**இன்றுநாளை அல்ல தமிழ்நாடு என்றுமேதலை நிமிர்ந்திடும்**
**ஏற்றமிகும் மாற்றங்கள் எத்தனைஎத்தனையே செய்நம் முதல்வரே!**

விஞ்சுசெயல்கள் தமிழ்நாட்டினில் வீறுகொண்டெழுவதை ப்பொறுக்காதார்
வீண்பழிசுமத்தும் வேடிக்கை செய்ஒன்றிய அரசின்றோ
வஞ்சகத்தை ஒட்டுமொத்தமாய் வாரித்தமிழ் நாட்டினுடை
வரலாற்று வெற்றிஅரசின் திணித்தது அந்தோநம்

**புஞ்சைத்திடலையும் பொழில்சோலை ஆக்குகல்விக்** கொள்கையில்
புகுந்தளிக்கும் மும்மொழிக் கொள்கை புகுத்தினால் அதனை
கிஞ்சிற்றும் ஏற்காதே தமிழ்நாடு கிளர்ச்சிமேல் கிளர்ச்சி செய்தே
கீழ்வான் கதிரொளி எம்முதல்வர் ஒன்றிய இருட்டுக்கே ஒளிசெய்வாரே!

**தந்தைவழித் தனயரின் தகுதித் தகைமை வெல்லும்அத்**
**தடம்வழி மிகுதியான தடம்அமைத்துத் தாயகம்**
**நொந்துபோம் வழிசமைக்கும் ஒன்றிய அரசினுடை**
**நோக்கத் தீமைத் தாக்க அநீதியெலாம் வென்று நிலைபோதில்**
**வெந்தபுண்ணில் வேல்குத்தல்போல் மந்திமன ஒன்றியம்**
**வீண்புரட்டு உருட்டாக இருமொழிக் கொள்கைக்கு ஊறுசெய்து**
**மந்தமும்மொழிக் கொள்கைதமிழ் மாநிலம்புகுத்தும் மமதையை**
**மார்தட்டி எதிர்கொண்டே மாவெற்றிவாகைசூடும் எம்முதல்வரே!**



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
பன்னாட்டுத் தமிழுறவுமன்ற
உலக அமைப்பாளர்

இந்திஆதிக்கத்தினை எதிர்த்தோம் எம்தமிழ் நாட்டினர் அடடே!
இத்தேக்கு மரத்தேகத்தில் செந்தீவைத்து எரிந்தனரே!
முந்திஎதிர் கொண்டுமாச்சிறைக் கோட்டம் சென்றனரே
முத்தமிழ் நாடுமுழுதும் மொழிப் போராட்டம் புயல்வேகம்!
சந்தித்தாரே! தனிச்சிறை கலைஞர்எம்மான்! தமிழ்நாட்டுக்காய்!
சாவுக்களம் தமிழ்நாடே தமிழ்காக்க குருதிஆறே!
விந்தையிலும் விந்தையாம் வெற்றிஇருமொழிக் கொள்கை
தரும்நிலையை
வெற்றிக் களம்அமைத்துத் சுற்றுபகைமுடிப்பார் எம்**முதல்வரே!**

எத்தனை எத்தனை அடாவடித்தனம் ஒன்றியஅர சேஉம்மின்
ஏகபோகமாய் எம் உரிமைதடுத்(து) அடிமைசெய் ஒரேநாடு
பித்தலாட்டங் களைலொம்எதிர் கொள்வார் எம்முதல்வரே!
பீடுதமிழ்நாட்டார் அனைவரும் எம்முதல்வர் முன்பின் சூழ்வாரே!
யுத்தக்களம் அமைக்க நினைக்கும் ஒன்றியஅரசே உரிமைதடுப்பார்
உருக்குலைந்து அழிவார் இடிகரைபோல!; ஒரேநாடல்ல
புத்தம்புதிய உலகொன்றே **'யாதும் ஊரேயாவரும் கேளிர்'** என்னும்
ஈராயிரம் ஆண்டுஎம் கொள்கை எம்முதல்வரால் வெற்றிவாகை
சூடுமே!

---



# கையில் பூங்கொத்தோடு!

தந்தை பெரியார்
உறைவாளில் வளர்ந்தவனே!
கலைஞர் தோளில்
மறக்குணம் திரட்டியவனே!
கழகத் திடலாடிக்
கண்திறந்த பகைமைகளைப்
களமாடி வருபவனே!

**உதய சூரியன் கூட**
**ஒவ்வோர் நாளும்**
**பகல்செய்வான்**
**இரவில் ஓய்வெடுப்பான்.**

**கழகச் சூரியன்**
**நீயோ இரவிலும் ஓய்வெடுப்பதில்லை!**
**பகலிலும் ஓய்வெடுப்பதில்லை!**

**இன்றைய தமிழரின் மூச்சுநீ**
**இரவிலும் பகலிலும் எப்படி**
**ஓய்வெடுப்பாய்?**
**தொட்டில் பிறைமுதல்**
**கட்டில் முதியோர்வரை உன்**
**பார்வைபடர்கிறது பரிவு கரைகிறது.**

தாய்மனமே உனது
தலைமைச் செயலகம்.!

கண்ணீர் நிறுத்தமும்
புன்னகைத் திறப்புமே நீ வழங்கும்
தமிழகத்து வரவு செலவுத்திட்டம்!

உன்னை வாழ்த்தவேண்டாம்
என்று இருண்ட இதயங்கள்
வார்த்தைகளுக்குத்
தடைபோடலாம்
உன்னை வாழ்த்தத் துடிக்கும்
தமிழ்த்தாயின் குருதிக்கு யார்
தடைபோட முடியும்?
தமிழ் மண்ணின்
ஆசைக்கு யார்
தடைபோடமுடியும்?
உண்மைத்தமிழனின்
நன்றிக்கும் பற்றுக்கும் யார்
தடைபோடமுடியும்?

சட்டங்களைக்
குருதியில் குளிப்பாட்டித்தான்
மக்களாட்சியம்
தாய்மொழி கழுத்துக்கு மாலை
கொண்டுவருகிறது

அதிகார மையங்களை
அசைத்துத்தான் மக்களாட்சியம்
மாநிலத் தாகத்திற்கு
மைய மதகுகளைத் திறக்கப்
போராடுகிறது

மக்கள் முதல்வ!
உன்னை ஆட்சிக்காலம்
ஓய்விலிருந்து விலக்கியுள்ளது
உறக்கத்திலிருந்து விலக்கியுள்ளது
ஆனால்
பள்ளிக்குழந்தைகள்
புன்னகைக்கூட்டம் உன்னோடு!

**தாய்க்குலப் பரிவுகள் உன்னோடு!**
**படித்த அறிஞர்கள் நெறிவழி**
**உன்னோடு!**
**செயலாற்றும் அலுவலர் தொண்டர்கள்**
**உன்னோடு!**
**உன்னை**
**ஓய்விலிருந்தும் உறக்கத்திலிருந்தும்**
**விலக்கி வைத்த**
**ஆட்சிக்காலம் கையில்**
**பூங்கொத்தோடும் பாராட்டோடும்**
**விலகாமல்**
**இப்போது உன்னோடு!**



கவிப் பேரருவி
**ஈரோடு தமிழன்பன்**